

தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம். மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தலைமையில் மேற்கு தாம்பரம், சண்முகம் சாலை, பாரதி திடலில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியார் எல்.பிரபு, மாநகர இளைஞர் அமைப்பாளர் பி.கே.ஏ.சத்திய பிரபு, மாநகர மாணவர் அணி அமைப்பாளர் சு.கார்த்திக், வீ.கார்த்திக், ச.ராஜேஷ், வே. சிவசுப்பிரமணியன், ச.பிரபு, ஜெ.இன்சமாம். மு.தினேஷ்குமார், லோ.இலக்கியா, ஏ.செந்தில் குமார், அ.ஜோஸ்பிரபு, எம்.இளவரசன், சி.ப.வினோத் குமார், இரா.முரளிதரன் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவைக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, எம்.பி., தலைமைக் கழகப் பேச்சாளர்கள் இரா.தமிழரசன், நா.அருண், உரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தொகுதிப் பார்வையாளர் பரிதி இளம் சுருதி, டி.காமராஜ், எஸ்.இந்திரன், இ.ஜோசப்அண்ணாதுரை, எஸ்.சேகர், பி.சதாசிவம், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், இரா.சுரேஷ், த.ஜெயகுமார், ஆலந்தூர் சந்திரன், ஆ.நடராஜன், இ.எஸ்.பெர்னாட், ஏ.கே.கருணாகரன், க.தேவேந்திரன், வே.ராசேந்திரன், வி.ரவிச்சந்திரன், கோ.ஜானகிராமன், பம்மல் தினேஷ், ரமணிஆதிமூலம், பரிமளா, சி.ஜெகன், செ.சுரேஷ், எ.மனோகரன், இரா.விஜயகுமார், இரா.ரத்தினகுமார், ஜா.ரவிகுமார், இரா.செல்வகுமார், ஆர்.செல்வகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (25.01.2026) சென்னை, கிண்டி, கிங் நிலைய வளாகத்தில், 6.50 ஏக்கர் பரப்பளவில் ரூ.417.07 கோடி செலவில் அமையவுள்ள குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டிடத்திற்கு வரும் 27.01.2026 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ளதை தொடர்ந்து, இப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார்.தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி ராஜகுமாரி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா. கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக பதிவாளர் மரு.சிவசங்கீதா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் மணிகண்டன். கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், செயற்பொறியாளர் திரு.கோவிந்தராஜன் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் உழைத்த உழைப்பு வீண் போகாது!

# முதல்வருக்கு - தமிழ் மக்கள் அனைவரும் நன்றியோடு இருக்கிறார்கள்!

### சட்டப்பேரவையில் – பேரவைத் தலைவர் மு.அப்பாவு புகழாரம்!

**சென்னை, ஜன.26-**

**சட்டப்பேரவையில் - ஜன.24 அன்று - ஆளுநர் உரைமீதானவிவாதத்திற்குப் பதிலளித்து முதல்வர் அவர்கள் உரையாற்றி அமர்ந்ததும், பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேசுகையில்,**

**“நமது முதல்வர் அவர்கள் உழைத்த உழைப்பு வீண் போகாது! முதல்வருக்கு - தமிழ் மக்கள் அனைவரும் நன்றியோடு**



**இருக்கிறார்கள்!” என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதாவது:-

நாட்டு மக்களுக்குச் செய்த சாதனைகள், உழைத்த உழைப்பு வீண் போகாது. மக்கள் எல்லோருடைய மனதிலும் இன்றைய முதல்வர் அவர்கள் செய்து கொடுத்திருக்கின்ற திட்டங்கள், அவர்கள் வாழும் நாள் முழுவதும் அவர்களுடைய மனதிலே இருக்கும். இந்த நம்பிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் வெளியிட்டு, மீண்டும் நாங்கள் தான் ஆட்சிக்கு வருவோம் என்று நம்பிக்கையோடு இருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்களுக்கு தமிழ் மக்கள் அனைவருமே நன்றியோடு இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு குறிப்பிட்டார்.

### தமிழ்நாட்டில் முதன்முதலாக

# பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதைத் தொடங்கியது, கலைஞர் ஆட்சி!

### சட்டப் பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!

*சென்னை, ஜன. 26-*

**சட்டப் பேரவையில், நேற்று முன்தினம், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் ஆர்.பி.உதயகுமார் பேசும்போது குறுக்கிட்டு விளக்கமளித்து பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, ‘தமிழ்நாட்டில் முதன் முதலாக மக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவது எனும் திட்டத்தைத் தொடங்கியது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது ஆட்சி!’ என்று குறிப்பிட்டார்.**



சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டதாவது:-

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ‘கரும்பை நாங்கள்தான் கொடுத்தோம்’ என்று சொன்னார். ஒரு முழுக் கரும்பைக் கொடுத்தோம் என்று இப்போது இருக்கிற எங்களுடைய மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார். இதுபோன்று இருவரும் பேசிக் கொண்டிருக்கிறபொழுது, புதியதாக வந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதோ அ.தி.மு.க. ஆட்சியில்தான் இது முதன்முதலாகத் துவக்கினார்களோ என்கிற எண்ணம் வந்துவிடக் கூடாது என்பதற்காக ஒரு சிறிய விளக்கத்தைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

அப்போது உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராக நான்தான் பொறுப்பேற்றிருந்தேன். திடீரென்று ஒரு நாள் முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்கள் கூப்பிட்டு, “தமிழ்ப் புத்தாண்டு என்பதை முதன்முதலாக தைத் திருநாளில் நாம் கொண்டாடுகிறோம். ஆனால், ஒவ்வொரு குடும்பத்திற்கும், (இலவசமாக என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை,) வேண்டிய ஒரு கிலோ பச்சரிசி, 1 கிலோ வெல்லம், முந்திரி பருப்பு, உலர் திராட்சை இவைகளையெல்லாம் கொண்ட ஒட்டுமொத்தத் தொகுப்பை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்க வேண்டும்” என்றும் - “இந்தப் பொங்கல் திருவிழாவை அவர்கள் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்” என்றும் முதன் முதலாகத் துவக்கிய ஆட்சி கலைஞர் ஆட்சி, கலைஞர் தான் முதலமைச்சராக இருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்பு அம்மையார் தொடர்ந்தார், இப்போது நாங்கள் தொடர்கிறோம். ஆக, இதற்கு முதன் முதலாக வித்திட்டது. கலைஞர் ஆட்சி! கலைஞர் ஆட்சி! கலைஞர் ஆட்சி!

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆணித்தரமாகக் குறிப்பிட்டார்.

### உலகளாவிய பெண்கள் உச்சி மாநாட்டை தொடங்கி வைக்க நாளை காலை நந்தம்பாக்கத்திற்கு வருகை தரும்

# கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*சென்னை, ஜன. 26-*

உலகலாவிய பெண்கள் உச்சி மாநாட்டை தொடங்கி வைக்க நாளை 27.1.2026 காலை நந்தம்பாக்கத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, நாளை காலை 9.30 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து, கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

உலகளாவிய பெண்கள்



உச்சி மாநாடு ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நாளை 27-ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 10.00 மணியளவில் தொடங்குகிறது.

தமிழ்நாடு முதல் அமைச்சர் அன்புத் தலைவர் தளபதி அவர்கள் நேரில் வருகை தந்து இப்பெண்கள் உச்சி மாநாட்டை தொடங்கி வைக்கிறார்.

இம்மாபெரும் தொடக்க விழாவில் பங்கேற்க வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில், நாளை 27.1.2026 காலை 9.30 மணியளவில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சிலை அருகில் மேளதாளம் - பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இரு வண்ண கொடியையேந்தி 27-ஆம் தேதி காலை 9.30 மணிக்கெல்லாம் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சிலை அருகில் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இம்மாபெரும் வரவேற்பில் பங்கேற்பது “நமது கடமை - நமது உரிமை” என்ற அந்த லட்சிய உணர்வோடு கழகத்தினர் அனைவரும் அலைகடலென ஆர்ப்பரித்து வாரீர்! வாரீர்! ! என்று இருகரம் கூப்பி அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### சர்க்கரை குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு

# அரிசி குடும்ப அட்டையாக மாற்றித் தர நடவடிக்கை!

### சட்டப்பேரவையில் அம்பத்தூர் ஜோசப் சாமுவேல் கேள்விக்கு அமைச்சர் அர.சக்கரபாணி பதில்!

*சென்னை, ஜன. 26*

சட்டப்பேரவையில் பேரவையில் சக்கரை அட்டை குடும்ப தாரர்களுக்கு அரிசி குடும்ப அட்டையாக மாற்ற அரசு நடிவடிக்கை எடுக்கப்படுமா என்ற கேள்விக்கு அமைச்சர் அரசு சக்கரபாணி அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பதிலளித்தார்.

இது குறித்த விவாதம் வருமாறு:-

ஜோசப் சாமுவேல்: அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல நியாய விலைக் கடைகளில் அரிசி வாங்கி உணவுக்கு பயன்படுத்தக்கூடிய ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் அதிகமாக உள்ளனர். ஆனால், அவர்க





ளுக்கு வெள்ளை நிற குடும்ப அட்டை வழங்கியுள்ளதால் அவர்கள் அரிசி வாங்க முடியாத நிலையிலும், அரசு தரக்கூடிய சலுகைகளை வாங்க முடியாத நிலையிலும் உள்ளனர். எனவே, தகுதியுள்ளவர்களுக்கு அரிசி பெறக்கூடிய குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் அர. சக்கரபாணி: உறுப்பினரின் கோரிக்கையை கண்டிப்பாக அரசு பரிசீலனை செய்யும். இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 2 கோடியே 23 இலட்சம் அரிசி குடும்ப அட்டை வைத்திருக்கின்ற - ஏனென்றால், அதனால் தான் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்று கோரிக்கை வைக்கிறார். 2 கோடியே 23 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரொக்கமாக ரூ.3,000/-மும், அதோடு ஒரு கிலோ சர்க்கரை, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு முழு கரும்பு, வேட்டி, சேலை வழங்கியதால் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மக்களும் சிறப்பாக பொங்கலை கொண்டாடினார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் உறுப்பினர் அவர்கள் அந்த அட்டையை அரிசி அட்டையாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். எங்களுடைய துறை அதிகாரிகள் அந்த கடைக்கு சென்று ஆய்வு செய்து, தகுதி இருக்கின்ற பட்சத்தில் அந்த அட்டைகளையெல்லாம் அரிசி அட்டையாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### சபரி பி.செந்தில்குமார் தலைமை! இரா.செந்தில்குமார் - வ.பெ.சுரேஷ் முன்னிலை!

# சென்னை வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாபெரும் சிலம்பாட்டம்!

### தயாநிதிமாறன் எம்.பி., ஆர்.டி.சேகர் பரிசுகள் வழங்குகின்றனர்! கலாநிதி வீராசாமி - ஐட்ரீம் இரா.மூர்த்தி - ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு!

*சென்னை, ஜன.26*

சென்னை வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாபெரும் சிலம்பாட்டம் விளையாட்டு போட்டி இன்று (26.1.2026 திங்கட்கிழமை) மாலை 3.00 மணியளவில் ராபின்சன் மைதானம், சிமெண்ட்ரோடு, வாட்டர் டேங்க் அருகில் நடைபெறுகிறது.

மாவட்டவிளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சபரி பி. செந்தில்குமார் தலைமை வகிக்கிறார்.

இராயபுரம் பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள்: பா.கதிரவன், டி.லெனின், கே. ஆர்.பிரபு, ஏ.தேவன்பு, டி.தினேஷ்குமார்,

க.ஜினித், பி.கோபி, எ.விந்தன், கே.ஆர்.காளிதாஸ், வி.சுரேந்தர், ஜெ.தினேஷ், எஸ்.சண்முகம், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் பரிசுகள் மற்றும் நலஉதவிகள் வழங்குகின்றனர்.

இதில் கலாநிதிவீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, க.ஜெயராமன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், அ.முருகன், இரா.லட்சுமணன், தா.இளைய அருணா, பி.டி.பாண்டிச்செல்வம், ந.மனோகரன், ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, க.நாகம்மை, வி. தயாளன், வே.சிவக்குமார், சு.சேகர், கி. இராஜேந்திரன், நா.சண்முகம், த.ஜெயபாலன், கு.சுந்தர், பி.சேகர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மா, இ.மதன், பி.கண்ணன், க.கோவிந்தராஜ், க.கலைச்செல்வன், ஜி.சதிஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், இரா.பாலன், எம்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலாலட்சுமணன், ஜெ.கௌரிஸ்வரன், எஸ்.சுரேஷ், எல்.சீனிவாசன், அத்தோ பி.முனுசாமி, வி.குமார், ஐசிஎப் பழனி, எம்.என்.வெங்கட், கெ.லட்சுமணன், என்.பாரி, இரா.பொன்முடி, எஸ்.யுவராஜ், இரா.ஜெய்சங்கர், பிரியாணி பாலா, முகமது மொய்தீன், ந.குமார், எ.அன்வர், பி.பாலாஜி, லயோலா கே.மதன், பி.சோமசுந்தரமூர்த்தி, லயன் எம்.தீனதயாளன், கார்த்திக்செங்குட்டுவன், லியோடி. சுரேஷ், வி.லட்சுமிவேல், இரா.மருதுபாண்டியன், எஸ்.குமார், யு.அனிபா, மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

எஸ்.சண்முகம், பி.அஸ்வின், ஜெ.பிரபு, டேவிட் எம்.மனிஷ், எம்.கலைவாணன், எஸ்.ராஜா, ஏ.பி.அரசு, கே.புருஷோத்தமன், ஏ.அகஷ்டின், எம்.பரத்குமார், நந்தகுமார், ஆர்.நரேஷ், க.சதிஷ்குமார், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தியாகராய கல்லூரியில் பயிலும் 645 மாணவ, மாணவிகளுக்கு, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி தமிழ்நாடு அரசின் விலையில்லா மடிக்கணினிகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், வட்டச் செயலாளர் இரா. பாலன், கல்லூரி முதல்வர் தியாகராஜர், சுழற்சி 1, சுழற்சி 2, முதுகலை பேராசிரியர்கள், இளநிலை பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 க்கு உட்பட்ட 24 வது வார்டு சுகுணா காலனியில் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதுபிக்கப்பட்ட பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து அங்கிருந்த பொதுமக்களிடம் உரையாடி மேலும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து கேட்டறிந்தார்.. உடன் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமண், மாமன்ற உறுப்பினர் கீதா நாகராஜன், வட்டக் கழக செயலாளர் ஆர்.கே.நாகராஜன், கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.